தகவல் பெறும் உரிமைச் சட்டம்,

2005

மனித வள மேலாண்மை (ஆர்)த் துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை- 600 009.
பராபவ, ஆனி- 9
திருவள்ளுவர் ஆண்டு – 2057
தொலைபேசி எண். 044-2567 2740
Email: parsec@tn.gov.in

கடிதஎண்.4086/ஆர்/2026-1, நாள் 23.06.2026

அனுப்புநர்
திரு. சி. சமயமூர்த்தி, இ.ஆ.ப.,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் /
முதன்மைச் செயலாளர் / செயலாளர்,
அனைத்து தலைமைச் செயலக துறைகள்,
தலைமைச் செயலகம்,
சென்னை-600009.

ஐயா / அம்மையீர்

பொருள்: தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005-ன்கீழ் தகவல் வழங்கும்போது உரிய விவரங்களுடன் தகவல் வழங்குவது – அறிவுறுத்தங்கள் – வெளியிடப்படுகிறது.

பார்வை:
1. குறிப்பாணை எண்.10/1/2013-IR, மத்திய அரசின் பணியாளர்கள், பொதுமக்கள் குறைகள் மற்றும் ஓய்வூதிய அமைச்சகத் துறை, நாள் 06.10.2015
2. அரசுக் கடிதம் எண்.3038/நி.சீ-3/2020-1, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை, நாள் 06.03.2020
3. தலைமைச் செயலாளரது நேர்முகக் கடிதம் எண்.1240982/IT(C2)/2021, தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் துறை, நாள் 27.10.2021
4. அரசுக் கடிதம் எண்.4452554/ஆர்/2024-1, மனித வள மேலாண்மைத் துறை, நாள் 25.11.2024
5. அரசுக் கடிதம் எண்.1-A2/35/IT&DS(A2)/2024, தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் துறை, நாள் 07.02.2025

பார்வையில் காணும் இனங்களின்மீது தங்களது கவனம் ஈர்க்கப்படுகிறது.

2. தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005-ன்கீழ் தகவல் வழங்கும்போது கடைபிடிக்கவேண்டிய நடைமுறைகள் குறித்து பார்வை ஒன்றில் காணும் மத்திய அரசின் குறிப்பாணையின் நகல் அனைத்து பொது அதிகார அமைப்புகளுக்கும் பார்வை இரண்டில் காணும் கடிதத்தின் வாயிலாக அனுப்பிவைக்கப்பட்டது.

(த.பி.பா)

3. தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின்கீழ் பெறப்படும் மனுக்களுக்கு தகவல் வழங்கும் நேர்வில் பார்வை மூன்றில் காணும் கடிதத்தில் அறிவுறுத்தியுள்ளவாறு, அலுவல் ரீதியான மின்னஞ்சல் முகவரியினை பயன்படுத்துமாறு பார்வை நான்கில் காணும் அரசுக் கடிதத்தின் வாயிலாக கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

4. மேற்காணும் அறிவுறுத்தங்களின்படி, தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின்கீழ் தகவல் வழங்கும் நேர்வுகளில் அரசு அலுவல் ரீதியான மின்னஞ்சல் முகவரியினை அலுவலர்கள் பயன்படுத்துவதில்லை என தெரிவித்து, அரசுக்கு புகார்கள் தொடர்ந்து வந்துகொண்டிருக்கின்றன.

5. எனவே, பார்வை நான்கில் காணும் கடிதத்தில் அறிவுறுத்தப்பட்டுள்ளவாறு, தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005-ன்கீழ் தகவல் வழங்கும் நேர்வில், அலுவல் ரீதியான மின்னஞ்சல் முகவரியினை பயன்படுத்துமாறும், இதுகுறித்து அரசுக்கு மேற்கொண்டு புகார்கள் வராதவண்ணம் நடவடிக்கை மேற்கொள்ள தங்கள் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கும் அனைத்து அலுவலகங்களுக்கும் அறிவுறுத்துமாறும் தங்களைக் கேட்டுக்கொள்ளப் பணிக்கப்பட்டுள்ளேன்.

தங்கள் உண்மையுள்ள,

23/6/26

அரசு முதன்மைச் செயலாளருக்காக

23/6/26

நகல்:
பதிவாளர்,
தமிழ்நாடு தகவல் ஆணையம்,
எண். 19, அரசுப் பண்ணை கிராமம்,
பேர்ன்பேட், நந்தனம்,
சென்னை- 600 035.